# மயிலாடுதுறை நகராட்சி

குறள் : தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்

பொருள் : மனச்சாட்சிக்கு எதிராகப் பொய் சொல்லக்கூடாது.
அப்படி சொன்னவரின் மனமே அவரை தண்டிக்கும்.

கூட்ட எண்: 31 /2024

நகராட்சி அலுவலகம்
மயிலாடுதுறை.

நாள்: 26.09.2024.

## சாதாரணக்கூட்டம்

அன்புடையீர்!

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – சாதாரணக் கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

மயிலாடுதுறை நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 2024-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2024-ந்தேதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த,

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத்தலைவர்,

1) நகராட்சி ஆணையர், பொறியாளர், நகர்நல அலுவலர் ஆயோர்களின் ஆகஸ்ட் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம்.

**மன்றத்தீர்மானம் எண். 824, நாள்.30.09.2024**

**தீர்மானம்: பதிவுசெய்யப்பட்டது**

2) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மயிலாடுதுறை, அவர்களின் உத்தரவு ந.க.எண்.320/2024/டிசிபி, நாள்.15.03.2024–ன்படி வார்டு எண்–7, பிளாக் எண்–47, சர்வே எண்கள்–1451/2, 1451/4, 1451/5, 1451/6, 1451/7, 1451/8, 1451/9, 1451/10, 1451/11 மற்றும் 1451/12 இல் 5596.20 சதுரமீட்டர் பரப்பளவில் அமையும் 31 மனைகளை கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி மற்றும் வரைபட ஒப்புதல் எண். SWP/L.P/DTCP/Ma.Ma No.09/2024 –இன் படி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் சாலை 1201.26 சதுர மீட்டர், பொது உபயோகம் 30.42 சதுர மீட்டர் மற்றும் மின் வாரியத்திற்கு 30.42 சதுர மீட்டர், ஆகியவை தானபத்திரம் மூலம் மயிலாடுதுறை எண்1 இணை சார்பதி,வாளர் அலுவலக ஆவண எண். 535/2024 நாள்:11.03.2024 இன்படி மனைப்பிரிவு உரிமையாளர்களான திரு.G.பிச்சைகண்ணண், திருமதி.P.உஷா, திரு.P.கார்த்திக்குமார் மற்றும் திருமதி.K.நந்தினி. என்பவர்களால் மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனைப்பிரிவு அனுமதிக்கான பின்வரும் விவரப்படி கட்டணங்கள் நகராட்சியில் மனைப்பிரிவு உரிமையாளரால் நகராட்சியில் செலுத்தப்பட்டது.

| வ.எண் | கட்டணங்கள் விபரம் | கட்டணம் ரூ | செலுத்துச்சீட்டு எண் மற்றும் நாள் |
|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு வளர்ச்சி கட்டணம் | 10,000/– | 097/001/1/24–25/0011491 நாள் : 26.07.2024 |
| 2 | சாலை மற்றும் அடிப்படை வசதிகள் பராமரித்தல் கட்டணம் | 2,00,000/– | 097/001/1/24–25/0011490 நாள் : 26.07.2024 |
| 3 | மின் விளக்கு கம்பங்கள் அமைத்தல் மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டது | 2,17,810/– | PGCINB662451276 நாள் : 20.08.2024 |
| 4 | மின் விளக்கு அமைத்தல் நகராட்சிக்கு செலுத்தப்பட்ட கட்டணம் | 70,000/– | 097/001/1/24–25/0011492 நாள் : 26.07.2024 |

மேலும் சாலை மற்றும் பொதுப்பயன்பாட்டு இடம் நகராட்சி ஆணையர் பெயரில் நில அளவை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது, மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான பாதாள சாக்கடை குழாய், குடிநீர் குழாய், மழை நீர் வடிகால் அமைப்புகள் மற்றும் தார் சாலை போடப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் சான்று அளித்துள்ளார். அனைத்து 31 மனைகளுக்கும் நகராட்சியால் காலி மனை வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு நகராட்சியால் இறுதி ஒப்புதல் அளித்து உரிய உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1234/2024/எப்1.**

**மன்றத்தீர்மானம் எண். 825, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

3) தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்புறம்) Safaimitra suraksh shehar தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலத்தில் உள்ள 24X7 தொலைபேசி உதவி மையத்திற்கு வெளிக்கொணர்வு முகாம் அடிப்படையில் பணியாளர் பணியாற்றிய காலத்திற்கான ஊதிய தொகை ரூ.5,40,086-யை Mentor Inforfocamm நிறுவனத்திற்கு வழங்குவதற்கு ஏதுவாக இந்நகராட்சி பங்கு தொகை ரூ.27,100-யை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந,க,எண். 2782/2024/எச்1**

**மன்றத்தீர்மானம் எண். 826, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

4) மயிலாடுதுறை நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இராஜன் தோட்ட வளாகத்தில் அரசின் சிறப்பு திட்டமான கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022-ன் கீழ் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையம் மற்றும் நூலகம் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தற்பொழுது நகராட்சி நிர்வாக தஞ்சாவூர் மண்டலம் பகுதிகளில் 11 நகராட்சிகளின் மையங்களை கண்காணித்து பராமரித்திட மண்டல நகராட்சிகளின் நிர்வாகத்தால் ஒப்பந்தப்புள்ளி பிரேரணைகள் மூலம் Private Service Provider தேர்வு நடைபெற்று இந்நகராட்சிக்குரிய மையத்திற்கு ஒருவரை வழங்கி, அந்த பணியாளருக்குரிய மாதாந்திர ஊதியத்தினை இந்நகராட்சி மூலம் வழங்கிட நெறிமுறைகளை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் மூலம் ந.க.எண்.2248/2022/இ1, நாள்.03.01.2024-ன்படி வழங்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட விவரங்கள்படி இந்நகராட்சி அறிவுசார் மையம் மற்றும் நூலகத்திற்கு M/S.Fusion Man Power and Infra Services. Trichy -12 நிறுவனம் மூலம் பிப்ரவரி 2024 முதல் Care Taker ஒருவர் நியமனம் செய்யப்பட்டு இந்நகராட்சி அறிவுசார் மையத்தில் பணிபுரிந்து வருகிறார். அவருக்கு, ஊதியம் வழங்கிட ஆண்டொன்றுக்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2024/இ1.**

**மன்றத்தீர்மானம் எண். 827, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**5)** மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் **2024** ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் நடைபெறும் துலா உற்சவ காலத்தில் பார்க் அவென்யூ சாலையின் தென்புறம், பழங்காவேரி, வடபுறம் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிக விழாக்கடைகள் **11.11.2024** முதல் **30.12.2024** வரையிலான காலத்திற்கு அமைத்துக்கொள்ளவும் அதற்கான கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் விளம்பர செலவினத்திற்குரிய தொகையினை பொது நிதியில் இருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 3661 /2024/அ2**

**மன்றத்தீர்மானம் எண்.828, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

6) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.18, திம்ம நாயக்கன் படித்துறையில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23-ன் கீழ் கூட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் பெறப்பட வேண்டிய CTE சான்றிதழ் பெற்றிட ரூ.56800/- வங்கி வரைவோலையாக DEE. TNPCB. Nagapattinam அவர்களுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்காணும் CTE கட்டணத்தொகை ரூ. 56800/- ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.3069/2024/இ1,**

**மன்றத்தீர்மானம் எண்.829, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

7) மயிலாடுதுறை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23 கீழ் இந்நகராட்சி வார்டு எண்.18, திம்ம நாயக்கன் படித்துறையில் புதிதாக கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடையினை பராமரிக்கும் பணிக்கு தகுதி வாய்ந்த முன் அனுபவமுள்ள நிறுவனங்களிடமிருந்து விருப்பு அழைப்பு (EOI) □□□□□□□□□□□ நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.9,975/- ஐ வழங்கிட கோர தினசூரியன் நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி அத்யாவசிய பிரசுர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தினசூரியன் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.2722 /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.830, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

8) மயிலாடுதுறை நகராட்சியில் NULM 2020-21 திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளியுடன் உடன் வருபவருக்கு தங்கும் விடுதியினை பராமரிக்க தகுதி வாய்ந்த முன் அனுபவமுள்ள நிறுவனங்களிடமிருந்து விருப்பு அழைப்பு (EOI) கோரியதை மாவட்ட அளவில் தினபூமி நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் தொகை ரூ.8,291/- ஐ வழங்கிட கோர தினபூமி நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி அத்யாவசிய பிரசுர கட்டண பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தினபூமி நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.2822 /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.831, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

9) மயிலாடுதுறை நகராட்சியில் வார்டு எண்.36-ல் அமைந்துள்ள அக்கனாங்குளம் மேம்படுத்தும் பணி ரூ.90.25 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-22-ன்கீழ் மேற்கொள்ளப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படியான இதர பணிகளை மேற்கொண்டு இப்பணியினை முழுமையாக முடித்திட வேண்டியது அவசியம் ஆகும்.

**பணியின் விவரம்**:

1. SS Hand Roads, (விடுபட்ட பகுதி)
2. Led Name Board
3. SS Main Gate
4. Electrical Street Light Arrrangements
5. Sitting Chair Arrangements
6. Compound Wall

மற்றும் பசுமை மரச்செடிகள்அமைத்தல் உட்பட்ட 7 பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.19.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது, மேலும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.832, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

10) **மயிலாடுதுறை நகராட்சி - வார்டு எண்.33 கோயில் ஆராயத் தெருவில் 150 மீ நீள சாலை பழுது ஏற்பட்டு குண்டும் குழியுமாக உள்ளதை சீர் செய்யும் பொருட்டு புதிதாக தார் சாலை அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது, இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** /2024/**இ1**

**மன்றத்தீர்மானம் எண்.833, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**11)** மயிலாடுதுறை நகராட்சியில் குடிநீர் விநியோக பணியில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும், இப்பணிகளை உடனடியாக மேற்கொண்டால் தான் இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் சீரான முறையில் நடைபெறும் என்பதால் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை உடனடியாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.

**பணிகளின் விவரம்:**

1. வரதாச்சாரியார் பூங்காவில் உள்ள போர்வெலில் இருந்து 4" -GI Pipe போட்டு அருகில் உள்ள OHT-க்கு Supply Line கொடுப்பது மற்றும் அருகில் உள்ள புதிய பேருந்து நிலையத்திலிருந்து குடிநீர் லாரிக்கு தண்ணீர் நிரப்புவதற்கு லைன் போடுவது,
2. சித்தர்காடுபோர்வெல்லிருந்து அருகில் உள்ள பழைய குடிநீர் பகிர்மான குழாய் பைப்லைன் (3" -GI) இணைப்பு கொடுப்பது,
3. ஆனந்ததாண்டவபுரம் குப்பை கிடங்கில் உள்ள போர்வெல்லில், புதிதாக Starter மாற்றி, Motor Service உட்பட்ட பணிகள் மேற்கொள்வது,
4. தரங்கை சாலை வண்டிப்பேட்டை போர்வெல்லில், புதிதாக மோட்டார் 25 HP, Starter மற்றும் (100" -GI Pipe line-4") அமைப்பது,

மேற்கண்ட நான்கு பணிகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** /2024/**இ1**

**மன்றத்தீர்மானம் எண்.834, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

12) மயிலாடுதுறை நகராட்சியில் வார்டு எண்.8 திருமஞ்சன வீதியிலிருந்து தீபாய்ந்தாள் அம்மன் கோயில் செல்ல அமைக்கப்பட்ட நடை பாலம் முற்றிலும் சேதமடைந்து ஆபத்தான நிலையில் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேரடி ஆய்வின் போது (07.07.2024) – உடனடியாக இடித்து அப்புறப்படுத்த தெரிவித்ததற்கிணங்க, பாலத்தினை உடைத்து (தூண்கள் தவிர்த்து) அப்புறப்படுத்த ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.38,000/- ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.835, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

13) **மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட கட்டமைப்பு வசதி இல்லாத இடங்கள் மற்றும் விரிவாக்க பகுதிகளில் (5 வார்டுகளில் முற்றிலும் புதிதாக கழிவு நீர் சேகரிப்பு வசதிகள் ஏற்படுத்துவது மற்றும் 25 வார்டு பகுதிகளில் விடுபட்ட தெருக்களில் கழிவு நீர் சேகரிப்பு வசதி ஏற்படுத்துவது) போன்ற பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 93, நாள்.12.07.2023ன் படி ரூ.99.08 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.**

**மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை அவர்களின் கடித எண்.TNUDF/Projects/SMIF-TN-III/Mayiladuthurai UGSS. நாள்:10.07.2024 தேதிய கடிதத்தில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு Tamil Nadu Urban Development Fund (TNUDF) மூலம் ரூ.17.44 கோடி Loan Sanction-இல் தெரிவித்துள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு சம்மதம் தெரிவித்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**Terms and Condition :**

1) **Amount of Loan : Rs.17.44 crores (Rupees Seventeen Crores and Forty Four Lakhs only.**
2) **Project : Providing underground Sewerage Scheme to the left out areas in Mayiladuthurai Municipality.**
3) **Project Cost : Rs.83.03 Crores.**
4) **Rate of Intrest : 8.10 % per annum at half-yearly rests.**
5) **Principal Moratorium : 5 years.**
6) **Repayment Period : 15 years.**
7) **Financing Plan :**

| SL. NO. | Means of Finance | Amount (Rs. In Crores) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under KfW assisted SMIF -TN- III | 17.44 | 21.00% |
| 2 | Grant from Project Sustainability Grand Fund (PSGF) under KfW assisted SMIF -TN-III | 35.87 | 43.21% |
| 3 | Grant from GoI Under SBM 2.0 | 10.59 | 12.75% |
| 4 | Grant from Go TN Under SBM 2.0 | 6.99 | 8.42% |
| 4 | Grant from CGF | 8.22 | 9.90% |
| 5 | ULB Contribution | 3.92 | 4.72% |
| | Total | 83.03 | 100.00% |

8) **Completion Period** :

The proposed project should be completed within two years from the dte of commencement of the project.

9) **Last Date of withdrawal** :

Unless TNUIFSL agrees in writing, the right to make withdrawals from the Loan shall cease on completion of three years from the date of three years from the date of execution of the Loan Agreement.

10) **Special terms & Condition** :

a) **Procurement Guidelines** :

The Municipality shall follow Tamil Nadu Transparency in Tender Act, 1998 for selection of contractors and execution of works. The Municipality shall undertake the selection of contractors only after TNUIFSL approve the selection procedure.

b) **ULB Contribution**:

The Municipality shall contribute an amount of Rs,3.92 crores (Rupees Three Crores and Ninety Two Lakhs only) equivalent to 4.72% of Project Cost as own contribution during the construction period.

c) **House Service Connection Deposit & User Charges(Tariff)**

The Municipality shall levy and collect from the beneficiary (ies) the following:

| Plinth Area of Assessment in Sq.ft | Proposed Deposit(Rs.) | | Proposed Trriff (Rs,/month) | |
|---|---|---|---|---|
| | Domestic | Non-Domestic | Domestic | Non-Domestic |
| <600 | 7500 | 15000 | 100 | 300 |
| 601-1200 | 10000 | 20000 | 120 | 360 |
| 1201-1800 | 12500 | 25000 | 140 | 420 |
| *1801 | *15000 | *30000 | *160 | *480 |
| *This is the base rate for the plinth area of 1801 sq.ft. The deposit and tariff for plinth area above 1801 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | |

The Municipality shall increase the house service connection deposit & user charges (tariff) by a minimum of 10% of the base rate on completion of first five years of operation and a minimum of 10% of the prevailing rate thereafter once in every five years.

d) The Municipality shall open a separate "Project Account" for the sub-projecst assisted under SMIF-TN-III in the Books of Accounts of the Municipality.

e) The Municipality shall maintain all the Receipt and payment vouchers (along with supporting documents) pertaining to the sub-project assisted under SMIF-TN-III separately. Bank pass sheets (duly certified by the Bank) for the Bank account have to be contained periodically (Monthly/quarterly) by the Municipality and maintained separately, The Municipality shall close the Project Accounts on 31st March 2024. The Municipality shall project Accounts, Bank Account and other transaction to the Auditor appointed by TNUIFSL for auditing of the sub-project accounts and for preparation of Project Audit Report.

f) Operation & Maintenance:

The Municipality shall operate and maintain the project assets in a good working condition and meet the operation & maintenance charges from the user charges collected from the beneficiaries.

g) Loan from others:

The Municipality shall not avail any fresh loans from banks, institutions or any other agency during the tenure of TNUDF's Loan without obtaining prior written approval from TNUIFSL.

h) Environmental, Climate Change & Social Management Framework:

The Municipality shall implement the Project according to the Environmental, Climate Change and Social Management Framework (ECSMF) developed by TNUIFSL.

i) Debt Service Payment:

The Municipality shall honour the debt service payment on the respective due date prescribed by TNUDF. If the Municipality fails to honour the debt service on the respective due date, the same shall be recovered from the State Finance Commission Devolution grant through Director of Municipal Administration.

11) The Municipality shall place the terms and conditions of Term Loan Sanction before the Council for acceptance and forward a certified copy of the resolution passed by the Council.

12) **The Municipality shall enter into the following before availing the Term Loan.**

i) **Term Loan Agreement (Draft Loan Agreement describing the detailed terms and conditions of the Loan is enclosed as Annexure-1).**

ii) **Tripartite Agreement for Operation of Designated Project Account (Draft Tripartite Agreement is enclosed as Annexuer-2).**

13) **This sanction should not be construed as giving rise to any binding obligation on the part of TNUDF unless, the Municipality completes the loan documentation within 90 days from the date of receipt of this letter or such further time sa may be allowed by TNUDF in its sole discretion.**

**மேற்கண்டவாறு, நிபந்தனைகளுக்கு சம்மதம் தெரிவித்து** Tamil Nadu Urban Development Fund (TNUDF) **மூலம் கடன் தொகை பெற மன்றம் ஏற்றுக்கொண்டு அரசின் உரிய அனுமதியுடன் செயல்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.**

**அலுவலக குறிப்பு** : **1.பாதாள சாக்கடை திட்டப்பணியின் அவசியம் கருதி மேற்கண்ட நிபந்தனைகளுக்கு சம்மதம் தெரிவித்து** Tamil Nadu Urban Development Fund (TNUDF) **இன் மூலம் ரூ.17.44 கோடி கடன் தொகை பெற மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.** 4631/2022/இ1

**மன்றத்தீர்மானம் எண்.836, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

14) **மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட கட்டமைப்பு வசதி இல்லாத இடங்கள் மற்றும் விரிவாக்க பகுதிகளில் (5 வார்டுகளில் முற்றிலும் புதிதாக கழிவு நீர் சேகரிப்பு வசதிகள் ஏற்படுத்துவது மற்றும் 25 வார்டு பகுதிகளில் விடுபட்ட தெருக்களில் கழிவு நீர் சேகரிப்பு வசதி ஏற்படுத்துவது) போன்ற பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 93, நாள்.12.07.2023ன் படி ரூ.99.08 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.**

**மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை அவர்களின் கடித எண்.**TNUDF/Projects/SMIF-TN-III/Mayiladuthurai UGSS. **நாள்:10.07.2024 தேதிய கடிதத்தில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு** Project Sustainability Grant Fund (PSGF) Under Kfw assisted SMIF-TN-III **மூலம் ரூ.35.87 கோடி மான்யத் தொகை வழங்கிட கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு சம்மதம் தெரிவித்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

Terms and Condition :

1) **Amount of Grant** : **Rs.35.87 crores (Rupees Thirty Five Crores and Eighty Seven Lakhs Only)**

2) **Project** : **Providing underground Sewerage Scheme to the left out areas in Mayiladuthurai Municipality.**

3) **Project Cost** : **Rs.83.03 Crores.**

4) **Financing Plan** :

| SL.NO. | Means of Finance | Amount (Rs. In Crores) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under KfW assisted SMIF –TN- III | 17.44 | 21.00% |
| 2 | Grant from Project Sustainability Grand Fund (PSGF) under KfW assisted SMIF –TN-III | 35.87 | 43.21% |
| 3 | Grant from GoI Under SBM 2.0 | 10.59 | 12.75% |
| 4 | Grant from Go TN Under SBM 2.0 | 6.99 | 8.42% |
| 4 | Grant from CGF | 8.22 | 9.90% |
| 5 | ULB Contribution | 3.92 | 4.72% |
| | Total | 83.03 | 100.00% |

5) **Completion Period** :

**The proposed project should be completed within two years from the due of commencement of the project.**

6) **Last Date of withdrawal:**

**Unless TNUIFSL agrees in writing, the right to make withdrawals from the Grant shall cease on completion of three years from the date of Acceptance of Grant terms.**

7) **Special terms & Condition** :

a) **Procurement Guidelines** :

**The Municipality shall follow Tamil Nadu Transparency in Tender Act, 1998 for selection of contractors and execution of works. The Municipality shall undertake the selection of contractors only after TNUIFSL approve the selection procedure.**

b) **The Municipality shall open a separate "Project Account " for the sub-project assisted under SMIF-TN-III in the Books of Accfounts of the Municipality.**

c) **The Municipality shall maintain all the Receipt and payment vouchers (along with supporting documents) pertaining to the sub-project assisted under SMIF-TN-III separately. Bank pass sheets (duly certified by the Bank) for the Bank account have to be contained periodically**

(Monthly/quarterly) by the Municipality and maintained separately. The Municipality shall close the Project Accounts on 31St March evey year. The first year Project Accounts shall be closed on 31st March 2025. The Municipality shall project Accounts, Bank Account and other transaction to the Auditor appointed by TNUIFSL for auditing of the sub-project accounts and for preparation of Project Audit Report.

d) Statement of Expenditure & Progress Reports:
The Municipality shall provide monthly Progress Report and Statement of Expenditure (SoE) during implementation in the format prescribed by TNUIFSL.

e) Environmental Climate Change & Social Managtement Framework:
The Municipality shall implement the Project according to the Environmental climate change and social management framework (ECSMF) Developed by TNUIFSL.

மேற்கண்டவாறு, நிபந்தனைகளுக்கு சம்மதம் தெரிவித்து Project Sustainability Grand Fund (PSGF) மூலம் மான்ய தொகை பெற மன்றம் ஏற்றுக்கொண்டு அரசின் உரிய அனுமதியுடன் செயல்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு : 1.பாதாள சாக்கடை திட்டப்பணியின் அவசியம் கருதி மேற்கண்ட நிபந்தனைகளுக்கு சம்மதம் தெரிவித்து Project Sustainability Grant Fund (PSGF) இன் மூலம் ரூ. 35.87 கோடி மான்ய தொகை பெற மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4631/2022/இ1

**மன்றத்தீர்மானம் எண்.837, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**15)** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொண்டு வருகிறது. இப்பணியில் சேகரிக்கப்படும் மக்காத நெகிழிப் கழிவுகளை எரிபொருளுக்காக சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்படுகிறது. நகராட்சியில் உள்ள டிப்பர் வாகனம் மூலம் தினசரி சென்றாலும் தினமும் சேகரமாகும் குப்பையின் அளவு அதிகமாக உள்ளதால் RRC நிரம்பி வெளியில் கொட்டும் சூழ்நிலை உள்ளநிலையில் தனியார் வாகனம் மூலம் வாடகைக்கு அமர்த்தி அரியலூர் அல்ட்ராடெக் சிமெண்ட் ஆலைக்கு கொண்டு செல்லப்பட்டு வருகிறது. இதற்கான உத்தேச வாடகை செலவினம் ரூ.10.00 (இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.4794/2024/எச்1**

**மன்றத்தீர்மானம் எண்.838, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

16) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35 வரதாச்சாரியார் தெரு, மற்றும் வார்டு எண்.3 அம்பேத்கார் நகர் ஆகிய இரண்டு பகுதிகளிலும், சிமெண்ட் சாலை அமைத்திட தற்போது அனுமதி வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இவ்விரண்டு இடங்களிலும், குடிநீர் குழாய் பழுது ஏற்பட்டு குடிநீரில் கழிவு நீர் கலப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. எனவே, மேற்படி, சிமெண்ட் சாலை அமைவதற்க்கு முன்பாக உடனடியாக குடிநீர் குழாய் புதியதாக மாற்றி அமைப்பது அவசியமாகும். எனவே, வரதாச்சாரியார் தெருவில் 180 மீட்டர், மற்றும் அம்பேத்கார் நகரில் 360 மீட்டர் நீளத்தில் புதிய குடிநீர் குழாய் அமைத்திட ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.70 இலட்சம் ஆகும். இப்பணியினை உடனடியாக மேற்கொள்ளவும், இதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.839, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

17) மயிலாடுதுறை நகராட்சி கிட்டப்பா நகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் புதிதாக வகுப்பறைக் கட்டடம் ரூ.15.00இலட்சம் மதிப்பீட்டில் பாராளுமன்ற உறுப்பினர் நிதி 2023-2024-ன் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டடத்தில் வெதரிங் கோர்ஸ், எலக்ரிக்கல் வயரிங் மற்றும் கலர் வாசிங் முதலான பணிகள் மதிப்பீட்டில் விடுபட்டபடியால், பணியின் முக்கியதுவம் கருதி பணிகள் முடித்து ஒப்படைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.840, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

18) மயிலாடுதுறை நகராட்சி கிட்டப்பா மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் புதியதாக 2 வகுப்பறைக் கட்டடம் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் SFC-School Improvement Grant-2023-2024- திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் பேஸ்மென்ட் உயரம் கூடுதலாக உயர்த்தப்பட்டதுடன், முகப்பில் Varanda பகுதிக்கு கூறை பகுதி அமைக்கப்பட்டதும் அவசிய ஒன்றாக செய்து முடிக்கப்பட்டது. எனவே, தற்பொழுது இப்பள்ளி கட்டடத்தில் Weathering Course, Electrical Wiring, Colour Washing போன்ற பணிகளை முடிக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பணிகளை உடன் மேற்கொண்டு இப்பணியினை முழுமையாக முடித்து பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஒப்படைக்க, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சம் ஆகும். இப்பணியினை உடனடியாக மேற்கொள்ளவும், இதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.841, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

19) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 காவேரி ஆற்றங்கரை சிமெண்ட் சாலை சிதலமடைந்து மக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது, மேலும், மேற்படி, சாலையின் இருபுறமும் மிகவும் தாழ்வாக உள்ளபடியால் தடுப்பு சுவர் அமைத்து இச்சாலையினை சீர் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, சாலையின் பாதிப்பு பகுதியினை உடைத்து தடுப்புசுவர் அமைத்து சாலையை புதுப்பிக்க வேண்டி அனுமதியும் அதற்கான உத்தேச செலவு மதிப்பீடு ரூ.14.00 இலட்சத்திற்கும் இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.842, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

20) மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிப்பில் உள்ள TN 51-S-5146 என்ற டிப்பர் லாரியின் தகுதிசான்று முடிவடைந்து விட்டதால் உடனடியாக தகுதிசான்று பெற வேண்டியது அவசியமாகும். எனவே இப்பணியினை உடனடியாக உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.2,50,000/-ம் இச்செலவினத்திற்கும் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 215/2024/எச்2**

**மன்றத்தீர்மானம் எண்.843, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

21) **மயிலாடுதுறை நகராட்சி பகுதியில்** TNUDF- KfW assisted SMIF-TB-III FUND **ன்கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள அரசாணை எண்**.93, **நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை** (**எம்.ஏ**.2) **நாள்**.12.07.2023 **மற்றும் அரசாணை எண்**.36, **நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை** (**எம்.ஏ**.2) **நாள்**.06.03.2024 **ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது**.

| **வ. எண்** | **பணி விவரம்** | **மதிப்பீடு(ரூ. கோடியில்)** |
|---|---|---|
| 1 | TNUDF- KfW assisted SMIF-TB-III FUND- **ல் மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் விடுபட்டுள்ள இடங்கள் மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் புதிதாக கழிவு நீர் சேகரிப்பு முறைகள் அமைத்தல் மற்றும் பழைய பாதாள சாக்கடை திட்டத்தில் அபிவிருத்தி பணிகள் மற்றும்** 5 **ஆண்டுகள், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள்**. | **ரூ**.57.65 |

**மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி** 19.01.2024**இல் பெறப்பட்டு** TNUIFSL **நிறுவனத்தின் ஒப்புதல்** 17.02.2024 **அன்று பெறப்பட்டு** 19.02.2024 **அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின்**,

விலைத்தொகுப்பு பிரிக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறிப்பிடப்பட்டிருந்தது.

| வ. எண் | மதிப்பீடு(ரூ.கோடியில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1. | ரூ.57.65 | M/s. Kevadiya Construction Pvt, Ltd. | 24.50 % மதிப்பீட்டை விட அதிகம். |
| | | N.P Patel & Co. | 35.21 % மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனங்களும் மதிப்பீட்டை விட கூடுதல் விலைவிகிதத்தில் அளித்துள்ளதால், இவற்றில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/s. Kevadiya Construction Pvt, Ltd. நிறுவனத்திடம் விலைகுறைப்பு செய்ய கோரியதில் கீழ்கண்டவாறு விலைவிகிதம்அளித்துள்ளனர்.

| வ. எண் | தேதி | ஒப்பந்ததாரர் பெயர் | விலைக்குறைப்பிற்கு பின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம். |
|---|---|---|---|
| 1. | 20.01.2024 | M/s. Kevadiya Construction Pvt, Ltd. | 23.33 % மதிப்பீட்டை விட அதிகம். |
| 2. | 21.01.2024 | | 11.64 % மதிப்பீட்டை விட அதிகம். |
| 3. | 22.02.2024 | | 7.48 % மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்படி, 7.48% மதிப்பீட்டைவிட அதிகம் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் அளித்துள்ள M/s. Kevadiya Construction Pvt, Ltd. நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைப்பொறியாளர், சென்னை அவர்களின் தலைமையில் மாநில அளவிலான TENDER AWARD COMMITTEE Minutes Dt 16.03.2024 காலை 11.00 மணியளவில் நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது. மேலும், மேற்கண்ட பணிக்கு 7.48 % மதிப்பீட்டைவிட அதிக விலை விகிதத்தொகை ரூ.3,42,34,751.36னை நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும், நகராட்சி ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று, இசைவு கடிதம் அனுப்பியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4631 /2022/இ1

மன்றத்தீர்மானம் எண்.844, நாள்.30.09.2024

தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது

22) மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் CGF 2023-24ன்கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது செயல்முறைகள் உத்தரவு கடிதம் எண்.21062/2023/SS2, நாள்.16.10.2023 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | பணி விவரம் | மதிப்பீடு(ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | CGF 2023-24 - Providing Pumping main from Sub Pumping Station IV,V,VI,VII to Pump the Sewage Collection to the Main Pumping Station VIII to Minimize Sewage Quantity in Back Bone Sewer- I & II Gravity Main in Existing UGSS Collection System in Mayiladuthurai Municipality. | ரூ.3.78 |

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 04.03.2024இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின், விலைத்தொகுப்பு 09.03.2024 அன்று பிரிக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறிப்பிடப்பட்டிருந்தது.

| வ. எண் | மதிப்பீடு(ரூ.கோடியில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1. | ரூ.3.78 | M/s. Kevadiya Construction Pvt, Ltd. | 33.36 % மதிப்பீட்டை விட அதிகம். |
| | | N.P Patel & Co. | 39.98 % மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனங்களும் மதிப்பீட்டை விட கூடுதல் விலைவிகிதத்தில் அளித்துள்ளதால், இவற்றில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/s. Kevadiya Construction Pvt, Ltd. நிறுவனத்திடம் விலைகுறைப்பு செய்ய கோரியதில் கீழ்கண்டவாறு விலைவிகிதம்அளித்துள்ளனர்.

| வ.எண் | தேதி | ஒப்பந்ததாரர் பெயர் | விலைக்குறைப்பிற்கு பின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம். |
|---|---|---|---|
| 1. | 13.03.2024 | M/s. Kevadiya Construction Pvt, Ltd. | 7.48% மதிப்பீட்டை விட அதிகம். |
| 2. | 15.03.2024 | | 7.39 % மதிப்பீட்டை விட அதிகம். |
| 3. | 04.07.2024 | | 7.30 % மதிப்பீட்டை விட அதிகம். |
| 4. | 05.07.2024 | | 7.29 % மதிப்பீட்டை விட அதிகம். |
| 5. | 09.07.2024 | | 4.98 % மதிப்பீட்டை விட அதிகம். |
| 6. | 12.07.2024 | | 4.45 % மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்படி, 4.45 % மதிப்பீட்டைவிட அதிகம் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் அளித்துள்ள M/s. Kevadiya Construction Pvt, Ltd. நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைப்பொறியாளர், சென்னை அவர்களின் தலைமையில் 27.08.2024 காலை 11.00 மணியளவில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது. மேலும், மேற்கண்ட பணிக்கு 4.45 % மதிப்பீட்டைவிட அதிக விலை விகிதத்திற்குண்டான தொகை ரூ.15,73,875.00னை நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும், நகராட்சி ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று, இசைவு கடிதம் அனுப்பியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மன்றம் பதிவு செய்யலாம்.**
2. **இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 2902 /2023/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.845, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**23)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட கச்சேரி ரோட்டில் வார்டு எண் 03, பிளாக் எண் 08, நகரளவு எண் 264/2, கதவு எண் 16, 16A அண்ணா பகுத்தறிவு மன்றம் என்ற இடத்தில் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவ வெண்கல சிலை அமைப்பதற்கு திராவிட முன்னேற்ற கழகத்தின் நகர செயலாளர் திரு. குண்டாமணி (எ) ந.செல்வராஜ் என்பவர் கோரியுள்ளார் எனவும் மேற்கண்ட இடத்தினை அரசு விதிகளின்படி ஸ்தல ஆய்வு மேற்கொண்டு அறிக்கை அளிக்குமாறு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்:11865/2024/இ2, நாள்:27.08.2024–இன் மூலம் கோரப்பட்டுள்ளது அதன்படி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகர சார் ஆய்வாளர் ஆகியோரால் ஸ்தல ஆய்வு செய்யப்பட்டு . அவர்களின் அறிக்கையின்படி மேற்கண்ட இடத்தில் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவ வெண்கல சிலை அமைப்பதற்கு தடையேதும் இல்லை என தடையின்மை சான்று வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்:**3574/2024/எப்1

**மன்றத்தீர்மானம் எண்.846, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**24)** மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்:14699/2023/ஊ2, நாள்:19.08.2024–இல் மயிலாடுதுறை நகர பகுதியில் பணிக்கு செல்லும் பெண்களுக்கு தங்கும் விடுதி அமைக்க மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:7, பிளாக் எண்:20, நகரளவு எண்:514/2 அரசுபுறம்போக்கு நந்தவனம் என்ற வகைப்பாடுடைய 0.2122.5 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் பெண்கள் தங்கும் விடுதி அமைத்திட நிலமாற்றம் செய்திட நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தை நகர சார் ஆய்வாளரால் ஸ்தல ஆய்வு மற்றும் நகரளவு ஆவணங்களில் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட நிலம் ''அரசுபுறம்போக்கு'' வகைப்பாட்டில், நந்தவனம் என உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தில் நகரப் பகுதியில் பணிக்கு செல்லும் பெண்களுக்கு தங்கும் விடுதி அமைத்திட நில மாற்றம் செய்து வழங்குவதற்கு நகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தீர்மானம் நிறைவேற்றிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்:3546/2024/எப்1**

**மன்றத்தீர்மானம் எண். 847, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

25) மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் ஆண்கள் - 66, பெண்கள் – 35, ஆக மொத்தம் -101, ஓட்டுனர்கள்–8, துப்புரவு பணி மேற்பாற்வையாளர் ஆண்கள் – 7, பெண்கள் – 3, அலுவலக உதவியாளர்கள் ஆண்கள் – 2, பெண்கள் -1, பொறியியல் பிரிவு மின்கம்பி உதவியாளர் – 1, குழாய் திருப்புநர் –1, மகப்பேறு ஆயா – 1, ஆகியோர்களுக்கு 2024 - 2025 ஆம் ஆண்டுகளுக்கு ஆண்கள் –85, பெண்கள் -40, ஆக மொத்தம் - 125 பணியாளருக்கு தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற காதிகிராப்ட், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் என்ற நிறுவனத்திலிருந்து சீருடைகள் வாங்கவும், அதற்கான செலவினத்தொகை ரூ.4.00 லட்சத்திற்கு 125 பணியாளர்களுக்கு அதற்கான தையல்கூலி தொகை ரூ.1.00 லட்சத்திற்கும் தையல்கூலியினை அவரவர் வங்கி கணக்கில் செலுத்துவதற்கும் பொது நிதியிலிருந்து செலவினத்தொகையை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி பணியாளர்களுக்கு சீருடை, தையல்கூலி வழங்கிடுவதற்கு நகர்மன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.3672/2024/எச்2**

**மன்றத்தீர்மானம் எண். 848, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

26) மயிலாடுதுறை நகராட்சியில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்த பணிகளில் திரு. கே, செந்தில் ஒப்பந்ததாரர் என்பவர் 2020-21-ம் ஆண்டில் பிடித்தம் செய்யப்பட்ட முன்வைப்புத்தொகை, கூடுதல் வைப்புத்தொகை வழங்கிடக் கோரியதன்பேரில், மேற்படி வைப்புத்தொகைகள் காலங்கடந்துவிட்டபடியால் காலங்கடந்த முன்வைப்புத்தொகை கீழ்காணும் விவரப்படி வழங்கலாம்.

| வ. எண். | பணியின் பெயர் | ASD FSD தொகை | ஒப்பந்ததாரர் வைப்புத் தொகை பதிவேடு விவரம் |
|---|---|---|---|
| 1 | 14th CFC – தர்மபுரம்ரோடு தார்தளம் அமைக்கும் பணி | 20065 | Lapsed Deposit Vol-IV. Page No.3. S.No.1425 |
| 2 | தர்மபுரம் ரோடு முதல் L.B நகர் வரை | 25055 | Vol-IV. Page No.2. S.No.1422 |
| 3 | தார்சாலை அமைக்கும் பணி மாயூரநாதர் மேலவீதி | 25000 | Vol-IV. Page No.3. S.No.1426 |
| 4 | தார்சாலை அமைக்கும்பணி L.B நகர் முதல் தெரு | 25160 | Vol-IV. Page No.3. S.No.1423 |
| 5 | தார்சாலை அமைக்கும் பணி L.B நகர் முதல் தெரு | 25225 | Vol-IV. Page No.2. S.No.1421 |
| | **மொத்த தொகை** | **1,20,505/-** | |

மேற்கண்ட தொகையினை காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் இருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1337/2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண். 849, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

27) மயிலாடுதுறை நகராட்சியில் 2024-2025 ஆம் ஆண்டிற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளை மேம்படுத்தல் பணிக்கு ரூ.393 இலட்சத்திற்கு 62 எண்ணிக்கை பணிகளுக்கு 9.183 கி.மீ நீளத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு டென்டர் கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது 38 பணிகள் முடிவுற்ற நிலையில் மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மேற்கண்ட பணிகள் சாலையின் நீளம் மதிப்பீட்டின் நீளத்தை விட கூடுதலாக உள்ளது. அவ்வாறான சாலைகளை முழு நீளத்திற்கும் முடித்திட வேண்டி, நகர் மன்ற உறுப்பினர்கள், அப்பகுதி வார்டு மக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோரின் கோரிக்கைக்கிணங்க, நகர்மன்றத்தலைவர், மற்றும் நகராட்சி பொறியாளர் அலுவலர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மேற்கண்ட கூடுதல் நீளத்திலான சாலைப்பகுதிகளை முழுமையாக முடித்திட வேண்டி பணி மேற்கொள்வதற்கு அனுமதியும், மற்றும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.17.60/- இலட்சத்திற்கு அனுமதி மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.850, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**28)** மயிலாடுதுறை நகராட்சி பொதுசுகாதாரம் வடகிழக்கு பருவமழை காலம் தொடங்க இருப்பதால் **2024–2025** ஆண்டிற்கான துாய்மை பணியாளருக்கு தளவாட பொருட்கள் பட்டியலில் கண்டவாறு வாங்கி இருப்பில் வைத்ததுக்கொள்ள ஏதுவாக ஆணையரின் உத்தரவிற்கும், அதற்கு உண்டான உத்தேசித்த தொகை ரூ.**5,00,000/-** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | கறுப்பு பினாயில் | 500 Lit |
| 2 | அண்ணக்கூடை | 100 Nos |
| 3 | அண்ணக்கூடை (பிளாஸ்டிக்) | 40 Nos |
| 4 | ஜாடி | 100 Nos |
| 5 | மண்வெட்டி | 70 Nos |
| 6 | கை தகரம் | 130 Nos |
| 7 | வாலி பெரியது | 18 Nos |
| 8 | வாலி சிறியது | 18 Nos |
| 9 | கடப்பாறை | 20 Nos |
| 10 | வார்கோல் | 500 Nos |
| 11 | சுரண்டி | 40 Nos |
| 12 | பிளாஸ்டிக் சட்டி | 50 Nos |
| 13 | முள்கம்பி | 60 Nos |
| 14 | பிரஸ் | 100 Nos |

| | | |
|---|---|---|
| 15 | அரிவாள் | 30 Nos |
| 16 | அலக்கு அரிவாள் | 12 Nos |
| 17 | பிக்காஸ் பிடியுடன் | 10 Nos |
| 18 | மாஸ்க் | 3000 Nos |
| 19 | கையுரை பெரியது | 250 Nos |
| 20 | சௌல் | 15 Nos |
| 21 | கம்பூட் | 80 Nos |
| 22 | ஹெல்மட் | 80 Nos |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.3806/2024/எச்1**

**மன்றத்தீர்மானம் எண்.851, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

29) மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு எதிர்வரும் வடக்கிழக்கு பருவமழை காலத்தை முன்னிட்டு இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் ஆண்கள் - 66, பெண்கள் – 35, ஆக மொத்தம் - 101. ஓட்டுனர்கள் – 8, துப்புரவு பணி மேற்பாற்வையாளர் ஆண்கள் – 7, பெண்கள் – 3, அலுவலக உதவியாளர்கள் ஆண்கள் – 2, பெண்கள் - 1, பொறியியல் பிரிவு மின்கம்பி உதவியாளர் – 1, குழாய் திருப்புநர் – 1, மகப்பேறு ஆயா – 1, ஆகியோர்களுக்கு 2024 - 2025 ஆம் ஆண்டுகளுக்கு ஆண்கள் – 85, பெண்கள் - 40, ஆக மொத்தம் - 125 பணியாளர்களுக்கு RAIN COAT வாங்கவும் அதற்கான செலவின தொகை ரூ.1,30,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3805/2024/எச்1**

**மன்றத்தீர்மானம் எண்.852, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

30) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18. திம்மநாயக்கன் படித்துறை அருகே அமைந்துள்ள உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை (Legacy waste) அகற்றி, அந்த இடத்தில் புதியதாக MRF 1 டன் கொள்ளளவில் அமைத்திட எதுவாக அவ்விடத்திலிருந்து குப்பைகளை (Legacywaste) ஆனதாண்டவபுரத்தில் உள்ள உரக்கிடங்கிற்கு கொண்டு சேர்த்திட ஏற்றி இறக்குதல் செலவு, வாகன வாடகை மற்றும் Hittachi வாகன நாள் வாடகை உட்பட உத்தேச செலவினம் தொகை ரூ.8.20 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: **1.** மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2024/எச்1.**

**மன்றத்தீர்மானம் எண்.853, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

31) மயிலாடுதுறை நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த பணிகளில் திரு. எஸ், வீராசாமி ஒப்பந்ததாரர் என்பவர் 2019-20-ம் ஆண்டில் பிடித்தம் செய்யப்பட்ட முன்வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை வழங்கிடக் கோரியதன்பேரில், மேற்படி வைப்புத் தொகைகள் காலங்கடந்துவிட்டபடியால் காலங்கடந்த முன்வைப்புத்தொகை கீழ்காணும் விவரப்படி வழங்கலாம்.

| வ. எண். | பணியின் விவரம் | FSD | ASD | ஒப்பந்ததாரர் வைப்புத் தொகை பதிவேடு விவரம் |
|---|---|---|---|---|
| 1 | Turip – 2019-20 திட்டத்தின்கீழ் சாலை பணிகள் Package – III | 106324 | 240540 | Lapsed Deposit Vol-IV. Page No.2. S.No.1420 |
| | | 27576 | 428960 | Lapsed Deposit Vol-IV. Page No.5. S.No.1437 |
| 2 | Turip – 2019-20 திட்டத்தின்கீழ் சாலை பணிகள் Package – IV | 82251 | 583355 | Lapsed Deposit Vol-IV. Page No.2. S.No.1419 |
| | | 22075 | 463295 | Lapsed Deposit Vol-IV. Page No.4. S.No.1436 |
| | **மொத்த தொகை** | **2,38,226** | **11,91,130** | |

மேற்கண்ட தொகை ரூ.238226 + 1191130 ஆக கூடுதல் தொகை 14,29,356/-யை காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் இருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.3764/2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.854, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

32) மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் கழிவு நீரேற்றும் நிலையம் 5-லிருந்து கழிவு நீர் நீரேற்றும் நிலையம் 4-க்கு கழிவு நீர் குழாய் மூலம் சென்றடைகிறது. இந்நிலையம் உபரி நீராலும், குப்பை அடைப்பினாலும், மண் படிமானத்தினாலும், கழிவு நீர் போலீஸ் ஸ்டேஷன் சாலையில் உள்ள Lifting MH – வெளியேறி சாலையில் தேங்கி துர்நாற்றம் மற்றும் பொது சுகாதார சீர்கேடுகள் விளைவிக்கிறது. இதனை உடனடியாக சரி செய்திட நகராட்சி மன்றத்தலைவர் ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க நேரில் தள ஆய்வு செய்திடல், பாசிக்கடை தெரு ஜங்சன் MH-லிருந்து கும்பகோணம் ரோடு வசந்த் & கோ எதிரில் உள்ள NH வரை கூடுதலாக 8' – PVC Pipe 4 KSC - 10cm-க்கு அமைக்க அனுமதியும், அதற்கான பதித்திட ஆகும் செலவினம் மற்றும் Pipe உட்பட செலவின மதிப்பீடு தொகை ரூ.2.10 இலட்சத்திற்கு மன்றத்தின்

அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினத்தை இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.855, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**33)** மயிலாடுதுறை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் 2023-24 ன் கீழ், கீழ் கண்ட பணியினை மேற்கொள்ள 22.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீட்டை விட குறைவு / மதிப்பீட்டை விட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் விபரம் |
|---|---|---|---|---|---|
| பாதாள சாக்கடை திட்டம் 2023-24 | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியில் கழிவு நீரேற்று நிலையம் எண்.VIII A முதல் VIII வரை கழிவு நீரேற்று குழாய் (200MM DIA PVC) அமைக்கும் பணி மேற்கொள்வது | ரூ.8,25,000/– | Mr.A.Sattaiyappan, Contractor, Mayiladuthurai. | ரூ. 689150.00/- (+)0.77% அதிகம் | M/S. SVS Engineering Contractor, Mayiladuthurai. |
| | | | M/S. SVS Engineering Contractors, Mayiladuthurai. | ரூ.683025.00/- (-) 0.12 % குறைவு | |

**<u>அலுவலக குறிப்பு</u> :**

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையரின் முன் அனுமதி பெற்று **பட்டியலில் கண்டுள்ள கலம் எண்**:6**இல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.**

**ந.க.எண்.00746/2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.856, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**34)** மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு காலணிகள், ஓட்டுநர்களுக்கு ஷூவும் 2024-2025 ஆம் ஆண்டுகளுக்கு TAN SIDCO அம்பத்தூர் என்ற நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற M/S KARTHIYA ENTERPRISES, CHENNAI - 58 என்ற நிறுவனத்திலிருந்து தூய்மை

பணியாளர் ஆண்கள் -66, பெண்கள்-35, ஆக மொத்தம் – 101, பணியாளர்களுக்கு காலணியும், ஓட்டுனர்கள் – 8 பேருக்கு ஷூவும் வாங்கி வழங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவினத்தொகையை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி பணியாளர்களுக்கு காலணி மற்றும் ஷூ வழங்கிடுவதற்கு வழங்கிடுவதற்கு வழங்கிடுவதற்கு நகர்மன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்**.3671/2024/எச்2

**மன்றத்தீர்மானம் எண்.857, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

35) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.3-ல் அம்பேத்கர் நகரில் உள்ள மழைநீர் வடிகால் சிதலமடைந்து தண்ணீர் வடியாமல் தேங்கி பொது சுகாதரா சீர்கேடு விளைவிப்பதால் நோய் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தில் புதிதாக மழை நீர் வடிகால் அமைத்திட ஆகும், மதிப்பீடு தொகை ரூ.5.15 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினத்தை இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**. /2024/**இ**1

**மன்றத்தீர்மானம் எண்.858, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

36) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.33-ல் உள்ள மடத்து சந்து பஞ்சுக்காரத் தெருவில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சிறுமின் விசை ஆழ்துளை கிணறு நீர்மட்டம் சரிந்து நீர் வற்றிய நிலையில், அப்பகுதியில் உள்ள பொது மக்கள் குடிநீர் பயன்பாட்டிற்கு சிரமப்படுவதை தொடர்ந்து, அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொது மக்களின் கோரிக்கைக்கிணங்க, புதிதாக Bore Well அமைத்து குடிநீர் வழங்கிட ஆகும், மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**. /2024/**இ**1

**மன்றத்தீர்மானம் எண்.859, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

37) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.3-இல் உள்ள அம்பேத்கார் நகரில் உள்ள அழ்துளை கிணறு நீர் மட்டம் சரிந்து நீர் வற்றிய நிலையில் அப்பகுதியில் உள்ள மக்கள் பயன்பாட்டிற்கு நீரின்றி சிரமப்படுவதை தொடர்ந்து, புதிதாக ஆழ்துளை கிணறு அமைக்க

ஆகும், மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** /2024/**இ**1

**மன்றத்தீர்மானம் எண்.860, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

38) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்23-இல் உள்ள பூக்கொல்லை தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க ஆகும், மதிப்பீடு தொகை ரூ.80,000/- த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**. /2024/**இ**1

**மன்றத்தீர்மானம் எண்.861, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

39) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.22-ல் மயிலம்மன் நகரில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்து குழாய் பதிக்க ஆகும் மதிப்பீடு தொகை ரூ.74,000/- த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.862, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

40) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.11-ல் மேல ஒத்த சரகு சாலையில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்க ஆகும் மதிப்பீடு தொகை ரூ.80,000/- த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.863, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**41) மயிலாடுதுறை நகராட்சியில் SBM 2.0 திட்டத்தின் கீழ், கீழ் கண்ட பணிகளை மேற்கொள்ள மின்னனு முறையில் 10.06.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**

| வ.எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீட்டை விட குறைவு / மதிப்பீட்டை விட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் விபரம் |
|---|---|---|---|---|---|
| 1. | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.29 இல் உள்ள அன்னை இந்திரா நகரில் பொது க் கழிப்பிடம் கட்டும் பணி | ரூ.31,30,000 /– | Mr.K. Senthil, Contractor, Mayiladuthurai. | ரூ.23,18,030/93/- (-) 0.07 % குறைவு | Mr.K. Senthil, Contractor, Mayiladuthurai. |
| | | | Mr.S. Santhosh, Contractor, Sirkazh. | ரூ.23,18,675.14/- (+) 0.04 % அதிகம் | |
| 2. | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.8இல் உள்ள திருமஞ்சன வீதி ஆற்றங்கரையில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி | ரூ.19,30,000 /– | Mr.K. Senthil, Contractor, Mayiladuthurai. | ரூ.16,00,754.68/- (-) 0.06 % குறைவு | Mr.K. Senthil, Contractor, Mayiladuthurai. |
| | | | Mr.S. Santhosh, Contractor, Sirkazh. | ரூ.16,26,628.84/- (+) 1.55 % அதிகம் | |
| 3. | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.03இல் உள்ள ஆணதாண்டவாபுரம் உரக்கிடங்கில் 1 (TPD) கொள்ளவு கொண்ட MRF மையம் கட்டும் பணி | ரூ.13,50,000 /– | Mr.S. Santhosh, Contractor, Sirkazh. | ரூ.11,11,271.49/- (-) 0.09 % குறைவு | Mr.S. Santhosh, Contractor, Sirkazh. |
| | | | Mr.K. Senthil, Contractor, Mayiladuthurai. | ரூ.11,15,836.75/- (+) 0.32 % அதிகம் | |

<u>அலுவலக குறிப்பு</u> : பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6இல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1021/2024/இ1

**மன்றத்தீர்மானம் எண்.864, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**42)** மயிலாடுதுறை நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற பயிற்சி மையத்திற்கு 2024–2025 ஆம் ஆண்டு சந்தா தொகை ரூ.2,00,000/–ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.3241/2013/சி1**

**மன்றத்தீர்மானம் எண்.865, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

43) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:05, துர்க்கை அம்மன் கோவில் தெருவில் தார்சாலை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை

ரூ.10.00 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : **மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்**. /2024/இ1

**மன்றத்தீர்மானம் எண்.866, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

44) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 04, **துர்க்கா காலணி** தெருவில் தார்சாலை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.11.00 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.867, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

45) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 28, ரயில்வே ஜங்சன் தார்சாலை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.12.00 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்**. /2024/இ1

**மன்றத்தீர்மானம் எண்.868, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

46) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 19, பணஞ்சாரி தெரு தார்சாலை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.18.00 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்**. /2024/இ1

**மன்றத்தீர்மானம் எண்.869, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

47) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 23, மயூரநாதர் மேல மடவிளாகம் பகுதியில் தார்சாலை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.        /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.870, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

48) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:04, ஞானாம்பிகை நகர் தார்சாலை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.871, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

49) <u>12-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி.ஹேமாவதி அருள்குமார் அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>

12-வது வார்டில் அமைந்துள்ள கவிஞர் வேதாநாயகம் நகராட்சித் தொடக்கப்பள்ளியில் 130 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மாணவர்களுக்கு விளையாட்டுத் திடல் கேட்டு பலமுறை நகராட்சி ஆணையர் அவர்களிடம் கடிதம் கொடுத்தும் இன்னும் விளையாட்டுத் திடலுக்கான பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது. இதனால் இப்பள்ளியின் பெற்றோர்களும், மாணவர்களும் கடும் அதிருப்தியில் உள்ளனர். இத்துடன் மாணவர்கள் சிறுநீர் கழிப்பதற்கான Open Toilet-ம் ஆசிரியர்களுக்கான கழிவறைகளும் மிகவும் குறைவாக உள்ளதால் 4 Urinals. 2 Toilets, இரண்டு வகுப்பறைக் கட்டிடம் ஆகியவையும் கட்டித்தருமாறும், இப்பணிகளை கால தாமதம் செய்யாமல் விரைந்து முடித்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**மன்றத்தீர்மானம் எண்.872, நாள்.30.09.2024**

**தீர்மானம்: நகராட்சியின் நிதிநிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

50) <u>24-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி. வளர்மதி தெய்வநாயகம் அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>

எனது 24-வது வார்டில் உள்ள கச்சேரி சாலை திருவாரூர் மார்க்கமாக மயிலாடுதுறை மற்றும் சென்னை செல்லும் பிரதான சாலையாக உள்ளது. அச்சாலையில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் பிற அரசுதுறை அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசியல் கட்சி உட்பட அமைப்புகள் சார்பில் போராட்டங்கள் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் எதிரில் சாலையில் சாலைமறியல் செய்வதால் போக்குவரத்து பெரிதும் பாதிப்படைகிறது. இதன் காரணமாக மாற்றுப்பாதையாக அருகில் உள்ள பட்டமங்கலத்தெருவினை பயன்படுத்த வேண்டி உள்ளதால் அங்கு வாகன நெரிசல் ஏற்பட்டு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வாகனம், பொது மக்கள் அவசரமாக செல்லமுடியாத நிலையிலும், பாதசாரிகள் பொதுமக்கள் மிகவும் துயரத்திற்கு ஆளாகிறார்கள். எனவே சின்னக்கண்ணாரத்தெரு, மட்டக்குளம் அருகில் உள்ள பாதையினை பயன்படுத்தி "**பார்க் அவென்யூ**" சாலையினை இணைக்கும் விதமாக சாலை உருவாக்கி பழம் காவேரியில் "**பாலம்**" அமைத்து மாற்று பாதையாக பயன்படுத்தினால் பொது மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். மேலும், போக்குவரத்து நெரிசல் மிகவும் குறையும். எனவே மேற்கண்ட இடத்தில் சாலை மற்றும் பாலம் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

**மன்றத்தீர்மானம் எண்.873, நாள்.30.09.2024**

**தீர்மானம்: நகராட்சியின் நிதிநிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

51) **<u>19-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி.கீதா செந்தில்முருகன் அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>**

எனது 19-வது வார்டில் அண்ணாநகர் முதல் காவேரிகரை வரை உள்ள வடிகால் 100% சேதமடைந்துள்ளதால் அதனை புதுப்பித்து தர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தருமபுரம் ரோடு மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிய தார்சாலை அமைத்து தரவேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**மன்றத்தீர்மானம் எண்.874, நாள்.30.09.2024**

**தீர்மானம்: நகராட்சியின் நிதிநிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

52) **<u>அனைத்து வார்டு நகர் மன்ற உறுப்பினர்களாலும் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>**

**மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் நகராட்சி ஆணையர், நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட கடிதம் ந.க.எண்.679/2024,**

மேற்கண்ட கடிதத்தில், நமது மயிலாடுதுறை நகரத்தில் குறிப்பாக பட்டமங்கல தெரு மற்றும் மகாதான தெரு போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு மாற்று பாதை தேவை என்கிற நீண்ட கால கோரிக்கையினை கருத்தில் கொண்டு ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில் ஒரு திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கான ஆதரவு அவசியப்படுகிறது எனவும், மேலும், குறிப்பாக நம் மயிலாடுதுறை நகரத்தை, காவிரி ஆறு தான் இரண்டாக பிரிகின்றது. அதனை கடக்க நகர மைய பகுதியில் இரு பாலங்கள் மட்டுமே அமைந்துள்ளது.

குறிப்பாக தங்கம்பாடி – மயிலாடுதுறை சாலை மற்றும் கல்லணை – காவேரி பூம்பட்டினம் மற்றும் சீர்காழி – கும்பகோணம் சாலை என மேற்படி மூன்று நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலைகளை இணைக்க கூடிய சாலை மற்றும் காவேரியில் புதிய பாலம் அமைக்கும் திட்டத்தை உங்கள் தொகுதியில் முதல்வர் திட்ட செயலாக்கத்தில் சட்டமன்ற தொகுதிக்கு தேவையான 10

கோரிக்கையில் ஒன்றாக செயல்படுத்த மாண்புமிகு முதமைச்சர் அவர்களுக்கு கோரிக்கையாக வைத்துள்ளதாகவும்,

அதன் அடிப்படையில் தரங்கம்பாடி சாலையிலிருந்த டபீர் தெரு விரிவாக்கம் சாலையில் துவங்கி - பொணம்போக்கி சந்தினை கடந்து, காவேரியில் புதிய பாலம் அமைத்து தொடர்ந்து மணக்குடி சாலை (கல்லணை – காவேரி பூம்பட்டிணம்) மற்றும் சீர்காழி சாலை என மூன்று சாலைகளையும் இணைக்கக் கூடிய புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மேற்படி சாலைகளை அகலப்படுத்தி, புதிய அணுகு சாலை அமைக்க வேண்டும். அதற்கு ஒரு சில இடங்களை நில எடுப்பு (LA) செய்ய வேண்டும் மற்றும் புதிய பாலம் அமைக்க நெடுஞ்சாலைத்துறை தான் நிதி அளித்து சிறப்பாக செயலாக்க முடியும் என்பதை கருத்தில் கொண்டு அவர்களை அணுகியதின் அடிப்படையில் இத்திட்டதிற்கு

36.00 கோடி தோராய மதிப்பீடு மற்றும் வரைப்படம் தயாரித்துள்ளார்கள். மேலும் நகராட்சிக்கு சொந்தமான மேற்படி சாலையினை அவர்களிடம் ஒப்படைத்தால் தான் திட்டத்தை செயலாக்க முடியும்.

ஆகவே மிகவும் அவசியமான, பயனுள்ள மேற்படி திட்டத்தினை விரைவாக செயல்படுத்த நகராட்சிக்கு சொந்தமான டபீர் தெரு விரிவாக்கம் சாலையினை நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்க நகர்மன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி தர ஆவண செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத்தீர்மானம் எண்.875, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

53) <u>28-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திருமதி.சுதா முரளி அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>

I. எனது 28-வது வார்டில் கிட்டப்பா பள்ளியிலிருந்து மாமரத்து மேடை நம்பர் 2 ரோட்டை இணைக்கும் சாலையை புதுப்பித்துத் தருமாறு அந்த சாலையின் குறுக்கே பழங்காவேரி மீது அமைந்துள்ள பாலத்தை அகலபடுத்தி தருமாறும் மேலும், நம்பர் 2 ரோட்டையும் கிட்டப்பா பள்ளி செல்லும் ரோடு இணையும் இடத்தில் கிட்டப்பா பள்ளியின் நூற்றாண்டு நினைவு வளைவு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

II. இரயில் நிலைய விரிவாக்க பணி காரணமாக இயில் நிலையம் அருகே (சாரத்தட்டை தெரு)-வில் அமைந்துள்ள நகராட்சி பொது கழிப்பிடமானது இடிக்கப்படுவதாக கூறப்படுகிறது. ஒரு வேளை அவ்வாறு அது இடிப்பதாக இருந்தால் அந்த பகுதியில் வேறொரு இடத்தில் புதிய கழிப்பிடம் கட்டி தந்துவிட்டு இடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மன்றத்தீர்மானம் எண்.876, நாள்.30.09.2024**

**தீர்மானம்: நகராட்சியின் நிதிநிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

54) <u>33-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திரு.இரா.நடராஜன் அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>

எனது வார்டில் அமைந்துள்ள ஆராயக்குளம் ஆக்கிரமிப்புகள் காரணமாக குளத்திற்கு தண்ணீர் வரத்து வழி அடைக்கப்பட்டு, 30 ஆண்டுகளாக மழை நீர் ஆதாரத்தையே நம்பி பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்போது அனைத்து குளங்களும் கலைஞர் மேம்பாட்டு நிதியின் பெயரில் சுற்றுப்பாதை அமைத்து வறண்டு கிடந்த குளங்களுக்கு ஆற்று நீர் வர வகையில் அனைத்து குளங்களும் தண்ணீர் நிரம்பி உள்ளது.

இது போல ஆராய குளத்திற்கும் செம்மங்குளம் வழியாக வானியத் தெருவில் கல்வெட்டு ஒன்றும் கோவில் ஆராயதெவில் கல்வெட்டு ஒன்றும் அமைத்து வடிகால் அமைதப்பதால் ஆராய குளத்திற்கு ஆற்று நீர் கிடைக்கும் ஆகையால் கீழ் கண்ட இரண்டு பணிகளை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- வானியத்தெரு கல்வேட்டு
- கோவில் ஆராயத்தெரு கல்வெட்டு வடிகால்

**மன்றத்தீர்மானம் எண்.877, நாள்.30.09.2024**

**தீர்மானம்: நகராட்சியின் நிதிநிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

**55)** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண் .21 குட்பட்ட தர்மபுரம் சாலையில் 1 LL கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரும் நிலையில், மேல் நிலை நீத்தேக்கத் தொட்டியினை பாதுகாத்திடும் பொருட்டு, சுற்றுச்சுவர் மற்றும் மோட்டார் ரூம் கட்ட ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.878, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**56)** மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் வழங்கல் மற்றும் விநியோக பணியில் கொள்ளிடம் ஆற்று படுகை அருகே முடிகண்டநல்லூரில் ஒரு குடிநீர் தலைமை பணியிடமும், நகர் பகுதியில் ஐந்து எண்கள் OHT-களும், உள்ளன. இதன் இயக்குதல் பணிக்காக வெளிமுகமை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 8 பணியாளர்கள் மூலம் பணி பார்க்க நகர் மன்ற தீர்மான எண். 693, நாள். 11.03.2024 –ன்படி, அனுமதிக்கப்பட்ட பணி ஜீன் 2024 உடன் பூர்த்தி அடைய பெற்றுள்ளது. தற்போது தமிழ்நாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.112 நாள்.17.08.2022ன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநரக சுற்றறிக்கை ந.க.21787/2021/EA2 நாள்.12.10.2021ன்படி, நெறிமுறைபடி அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்களை Service/provider/contractor/out sourcing by contract Basis அடிப்படையில் பணிகள் நடைபெற உரிய நிர்வாக அனுமதி பெறப்படும் வரை, குடிநீர் வழங்கல் பணி தடையின்றி நடைபெற நகர்மன்ற தீர்மான எண்.693, நாள். 11.03.2024ன்படி, அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை விதிதத்திற்கு எதிர் வரும் ஜீலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர்-2024 ஆகிய நான்கு மாதங்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரக தற்காலிக ஊழியர் ஊதியப் பட்டியல் 2023-24ன்படி, தயார செய்யப்பட்டுள்ள செலவீனம் ரூ.6.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. **மன்றம் அனுமதிக்கலாம்.**

**2.இப்பணிக்கான செலவினத்தினை 2024 –2025-ஆம் நிதியாண்டு குடிநீர் திட்ட வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**3. குடிநீர் பணியின் அவசிய அவசரம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்ற தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.879, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**57)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 2005-2006 -ஆம் ஆண்டு முதல் பாதாள சாக்கடை திட்டம் இயங்கி வருகின்றன. இப்பணியில் எட்டு கழிவு நீரேற்று நிலையங்கள், ஏழு கழிவு நீர் உந்து நிலையங்கள், 3425 எண்கள் ஆய்வுக்குழிகள், கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் 87.34 கி.மீ அமைக்கப்பட்டு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் வெளிமுகமை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிவ் பணிகள் நடைபெறுகின்றன.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.113 நாள்.17.08.2022-ன்படி பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அரசாணையின் வழிகாட்டி நெறிமுறைப்படி TWAD, PWD மற்றும் Collectrate ஊதியப்பட்டியலில் எது குறைவோ அதன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற வேண்டும் என்றும், இதன் அனுமதி மூன்று ஆண்டுகள் வரை மட்டும் out Sourcing/Private/Contract Basis அடிப்படையில் கடந்த 2019-ஆம் ஆண்டு முதல் பணிகள் நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளன.

மேற்காணும் விவரப்படி இந்நகராட்சி மூலம் UGSS திட்ட இயக்குதல் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை நாள்.02.10.2021 –ன்படி Skillled/Unskilled/Semi Skilled பணியாளர்கள்அளவுகோல் நிர்ணயித்தபடி, 82 எண்ணிக்கை பணியாளர்கள் வேண்டும். தற்போது, மாவட்ட ஆட்சித்தலைவர், மயிலாடுதுறை மாவட்ட அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.3391/2023/இ1 நாள்.09.06.2023ன்படி, ஊதிய பட்டியல்படி, M/S RD ECO SOLUTION அவர்கள் மூலம் 43 பணியாளர்களை கொண்டு கடந்த டிசம்பர் 2023 முதல் ஜுலை 2024 வரை இயக்குதல் பணியினை வெளிமுகமை அடிப்படையில் பணிகள் நடைபெற்றதில், உரிய முறையில் இயக்குதல் பணியினை மேற்கொள்ளாமல், நகரின் பல இடங்களில் ஆய்வுக்குழிகளில் கழிவு நீர் வழிந்தோடி வந்த நிலை கருதி, உரிய முறையில் UGSS திட்ட கழிவு நீர் சேகரிப்பு பணிகள் நடைபெற Private Service provider/Contractor/Agency-யினை மாற்றிட அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களிடம் கோரியமைக்கு UGSS பணி தடையின்றி நடைபெற நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் உரிய நிர்வாக அனுமதி பெறப்படும் வரை எதிர்வரும் August 2024 மாதம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றிறிக்கை நாள்.02.10.2021-ன்படி, 48 பணியாளர்கள் மூலம் பணியிள் அவசிய அவசரம் கருதியும் பொதுமக்களின் நலன் கருதி ஒரு மாதப்பணியினை மட்டும் மேற்கொள்ளவும், மேலும் இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.9.90 இலட்சம் செலவினத்திற்கும் பணியின் அவசிய அவசரம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள்

சட்டம் 2023 விதி எண்,235 பிரிவு-3-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.880, நாள்.30.09.2024**
**தீர்மானம்: பதிவு செய்யப்பட்டது.**

**58)** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.11-இல் உள்ள மேல ஒத்த சரகு சாலையில் குறுக்கே கட்டப்பட்டுள்ள சிறு பாலம் தாழ்வாக உள்ளதால் அதனை சாலை மட்டத்திற்கு மேல் உயர்த்தி புதிதாக சிறு பாலம் அமைக்க ஆகும், மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.881, நாள்.30.09.2024**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**59)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 2005-2006 –ஆம் ஆண்டு முதல் பாதாள சாக்கடை திட்டம் இயங்கி வருகின்றன. இப்பணியில் 8 Pumping Station 7 எண்கள் Shifting Station மற்றும் கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் 87.36 Km அமைக்கப்பட்டு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் வெளிமுகமை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணிகள் நடைபெறுகின்றன.

இப்பணிக்கு பணியாளர்களின் அளவு, கோல் நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2 நாள்.02.10.2021 அன்று சுற்றறிக்கை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 113 நாள்.17.08.2024 விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அரசாணையின் வழிகாட்டி நெறிமுறைப்படி TWAD,PWD மற்றும் மாவட்ட ஆட்சியரக ஊதியப்பட்டியலில் எது குறைவோ அதன் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற வேண்டும் என்றும், இதன் அனுமதி மூன்று ஆண்டுகள் வரையான Our Sourcing/Service Provider/Contracst Basis அடிப்படையில் பணிகள் நடைபெற வேண்டும் எனவும் தெளிவுரை வழங்கப்படுகின்றன.

மேற்காணும் விவரப்படி, உரிய நிர்வாக அனுமதி பெறப்படும் வரை இந்நகராட்சி UGSS திட்ட இயக்குதல் பணி நடைபெற மாவட்ட ஆட்சித்தலைவர், மயிலாடுதுறை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.3391/2023/இ1 நாள்.09.06.2023-ன் ஊதிய பட்டியல் படி மதிப்பீடுபடி ஆகஸ்ட் 2024-ஆம் மாதப்பணிக்காக தயார் செய்யப்பட்டு 31.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் M/S SVS Engineering Contractor அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியின் அதே விலைவிகித அடிப்படையிலேயே செப்டம்பர் அக்டோபர், மற்றும்

நவம்பர் 2024- ஆகிய மூன்று மாதங்களுக்கு M/S SVS Engineering Contractor அவர்களுக்கு வழங்கிய வேலை உத்தரவினை கால நீட்டிப்பு செய்து வழங்கி UGSS இயக்குதல் பணி நடைபெறவும், இப்பணிக்கான மூன்று மாத காலப்பணிக்கு மதிப்பீடு செலவினம் ரூ.29.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இச்செலவினத்தை இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **இப்பணிக்கான மதிப்பீட்டு செலவினத்தை 2024-2025 – ஆம் நிதியாண்டு UGSS திட்ட வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.882, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**60) மயிலாடுதுறை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் நிதியின் கீழ், கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 31.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**

| வ.எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீட்டை விட குறைவு / மதிப்பீட்டை விட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் விபரம் |
|---|---|---|---|---|---|
| பாதாள சாக்கடை திட்டம் 2023-24 | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு வெளிமுகமை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் வழங்கும் பணி. | ரூ.9,90,000/– | M/S. SVS Engineering Contractors, Mayiladuthurai | ரூ. 8,20,860,00/- (-)0.15% குறைவு | M/S. SVS Engineering Contractor, Mayiladuthurai. |
| | | | Mr.A.Sattaiyappan, Contractor, Mayiladuthurai. . | ரூ.8,24,100.00/- (+) 0.39 % அதிகம் | |

**அலுவலக குறிப்பு :**

1. **அனுமதிக்கலாம்.**
2. **பட்டியலில் கண்டுள்ள எண்:6இல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.**

**ந.க.எண்.00746/2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.883, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

**61)** இந்நகராட்சி பாதாள சாக்கடைத்திட்ட பராமரிப்பு பணியில் திடக்கழிவுகளால் sewer main and Inspection hamher – களில் அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் கசிவடைவதை தவிர்க்க நகர் மன்ற தீர்மான எண். நாள்.12.03.2024-ன்படி ஏப்ரல் மாதம் முதல் ஜுன் மாதம் 2024 வரை மூன்று மாதங்களுக்கு தனியார் செப்டிக் டேங் வாகனத்தை வாடகை அடிப்படையில் பயன்படுத்த ரூ.7,50,000/- நிர்வாக அனுமதி பெற்று பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் 2024-ன் தேர்தல் நடத்தை விதிமுறை அமுலில் இருந்ததால் ஒப்பந்தப்புள்ளி பிரேரணைகள் நடைபெற இயலாது தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை.

இந்த தேர்தல் நடத்தை விதிமுறை 06.06.2024 உடன் பூர்த்தி அடைந்துள்ளதால், நகர்மன்றத்தில் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி தனியார் செப்டிக் டேங் வாகனம் இரண்டு எண்கள் வாடகை அடிப்படையில் ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதம் 2024-க்கு பயன்படுத்த அனுமதியும், இப்பணிக்காக விலைப்புள்ளி மூலம் விலை விபரம் கீழ் காணும் விவரப்படி பெறப்பட்டதை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகன உரிமையாளர் விவரம் | மதிப்பீடு தொகை | மதிப்பீட்டைவிட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | m/s வெற்றி விநாயகா செப்டிக் வாகனம் | | ரூ. 7,43,750 | |
| 2 | m/s வேலன் செப்டிக் வாகனம் | | | 7,44,600/- |
| 3 | m/s கிருத்திகா செப்டிக் வாகனம் | 7,48,000 | | 7,49,700/- |

இப்பணிக்கு குறைவாக விலை விவரம் வழங்கியுள்ள m/s வெற்றி விநாயகா செப்டிக் வாகன உரிமையாளர் வழங்கியுள்ள விலை விகிதத்தை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான விலைவிபரம் வழங்கியுள்ள m/s வெற்றி விநாயகா செப்டிக் வாகனம் உரிமையாளருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**மன்றத்தீர்மானம் எண்.884, நாள்.30.09.2024**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது**

62) **<u>13-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திரு. ச. ரெத்தினவேலு அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>**

மயிலாடுதுறை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.18 அய்யனார் கோயில் தெரு, வ.உ.சி. தெரு, அய்யனார் கோயில் சந்து ஆகிய தெருக்கள் குண்டும் குழியுமாக உள்ளது. பள்ளி செல்லும் மாணவ, மாணவிகளும், பொதுமக்களும் சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள். உடனடியாக மேற்கண்ட மூன்று சாலைகளையும் தார்சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மன்றத்தீர்மானம் எண்.885, நாள்.30.09.2024**

**தீர்மானம்: நகராட்சியின் நிதிநிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

**நாள்:26.09.2024** **நகர்மன்றத்தலைவர்,**

**மயிலாடுதுறை நகராட்சி.**